**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLR**
**DEPOSITION OF WITNESS**

**Calender** :
**Miscellaneous** : **DVC.No.42/2024**
**Preliminary Register** :
**Police Station** :

**Deposition of witness for** : **PW1 Cross**
:

**Name** : **Sabina Banu**

**Village** :
**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.04.2026.**

**(**எதிரிகள் ஆஜர் **,** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**)**

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1. எனக்கு நடந்த வன்கொடுமை சம்பந்தமாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 15.05.2011 அன்று எங்களுக்கு திருமணம் நடைபெற்றது. எனக்கு இது இரண்டாவது திருமணம். இவை எனக்கு இரண்டாவது திருமணம் என்று எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. 59.05 பவுன் நகை எனக்கும் 4 பவுன் நகை அவருக்கும் கொடுத்தனர். மற்றபடி திருமணத்தின் பொழுது வீட்டு உபயோக பொருட்கள் அனைத்தும் எடுத்து வந்தேன். 59.5 பவுன் மற்றும் நான்கு பவுன் செயின் இவை அனைத்தும் என்னிடம் தான் உள்ளது. நாங்கள் சந்தோஷமாக குடும்ப நடத்திய பொழுது

எனது கணவர்8.05 பவுன் நகை வாங்கி கொடுத்தாரா என்றால் நெக்லஸ் மற்றும் பிரேஸ்லெட் வாங்கி கொடுத்தார். அவை எத்தனை பவுன் என்று எனக்கு தெரியாது. பிரேஸ்லெட் ஒரு பவுன் நெக்லஸ் இரண்டு பவுன் அவை இரண்டும் தற்பொழுது அவரிடம் தான் உள்ளது .

2. அவர் வாங்கி கொடுத்த பொருட்களை நகைக்கடைக்கு சென்று அவை எத்தனை பவுன் என்று சோதித்து பார்த்தேன் என்றால் இல்லை. எதை வைத்து செயின் இரண்டு பவுன் பிரேஸ்லெட் ஒரு பவுன் என்று கூறுகிறேன் என்றால் எனக்கு சரியாக தெரியாது என்று தான் கூறினேன். என்னிடம் காட்டப்படும் நகை காண ரசீது முதலில் உள்ள வசதி மட்டும் எனக்கு வாங்கி கொடுத்த நெக்லஸ் காண பில் ஆகும் . 18.05.2011 அன்று எனது கணவர் எனது தாயாருக்கு வலிமா நிகழ்ச்சி நடத்தி எனது தாயாருக்கும் எனது பாட்டிக்கும் பட்டுப் புடவை வாங்கி கொடுத்தார் என்றால் சரிதான். திருமணத்தின் பொழுது நாங்கள் அவரது பெற்றோர் மற்றும் அவரது தங்கைக்கு பட்டுப்புடவை மற்றும் வேஷ்டி எடுத்துக் கொடுத்தோம் .

3. எனது புகாரில் நாங்கள் செய்ததை குறிப்பிட்டு சொல்லி உள்ளேன்னா என்றால் திருமணத்தின் போது ஆன செலவை குறிப்பிட்டுள்ளோம் . பல்லாவரத்தில் வாடகை வீட்டை எனது கணவர் தான் பார்த்தார். ஆனால் அதற்கு முன் தொகையை எனது தாயார் தான் கொடுத்தார். ரூபாய் 50 ஆயிரம் ஆகும். திருமணத்தின் பொழுது அவர் வேலை செய்து கொண்டு இருந்தார். நானும் வேலைக்கு சென்று இருந்தேன். திருமணத்தின் போது இருவரும் வேலை செய்து கொண்டிருந்த பொழுது மாமியார் முன்தொகையை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் நான் இந்த வழக்கத்திற்காக நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. எனது தாயார் தான் ரூபாய் 50 ஆயிரம் கொடுத்ததற்கான ஏதேனும் ரசீது உள்ளதா என்றால் இல்லை . பல்லாவரத்தில் வாடகை வீட்டிற்கு எனது கணவர் தான் முன் தொகை கொடுத்தார் என்றால் சரியல்ல. 2023 ஆண்டு நான் தாக்கல் செய்த புகாரில் எனக்கு மாதம் ஒரு லட்சம் வருமானம் என்று குறிப்பிட்டுள்ளேன். ஆனால் ஒரு லட்சத்து 28 ஆயிரம் என்றால் எனது சம்பளம் மாதம் ஒரு லட்சம் தான் போனஸ் ஆறு மாதத்திற்கு ஒருமுறை வரும் அவை எனது செயல் திறனை பொறுத்து மாறும் அதனால் சம்பளத்தில் மட்டும் ஒரு லட்சம் என்று குறிப்பிட்டுள்ளேன். கூடுதல் தொகை வரும் என்பதை எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை . 2bhk வீடு 45 லட்சம் ஆகும். அந்த வீட்டிற்கு கடன் வங்கி கடன் எனது பெயரில்தான் வாங்கப்பட்டது. 10 லட்சம் முன் கை கொடுக்கப்பட்டது. 35 லட்சத்திற்கு வங்கி கடன் வாங்கப்பட்டது. 10 லட்சமும் எனது வங்கி கணக்கில் இருந்து தான் கொடுக்கப்பட்டது.

5. அந்த பத்து லட்சத்தை எதிர்மனுதாரர் தான் உங்கள் வங்கி கணக்கில் செலுத்தினார் என்றால் சரியல்ல. அந்த 10 லட்சம் எனது நண்பர்களிடம் கடனாக பெற்றேன். அதன் பின்பு அதை திருப்பி செலுத்தி விட்டேன். அபிராமி கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்திடம் ரூபாய் ஒரு லட்சம் எதிர்மனுதார் தான் கட்டினார் என்றால் என்னுடைய வங்கி கணக்கில் இருந்து எடுத்து அந்த ஒரு லட்சத்தை கொடுத்தோம். அவரது பெயரில் ரசீது வழங்கப்பட்டது. அந்த 10 லட்சத்தை எனது நண்பர்களுக்கு எனது கணவர் தான் கொடுத்தார் என்றால் அவரது வங்கி கணக்கில் இருந்து செலுத்தினார். ஆனால் எனது சம்பள பணத்தை அவரது வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டு அதிலிருந்து அவர் எனது நண்பர்களுக்கு கடனை திருப்பி செலுத்தினார். அது எனது பணமாகும் .

6. எனது மாதம் சம்பளம் 2012 ஆம் ஆண்டு 35 ஆயிரம் ஆகும் சுமார் . அதற்கு உண்டான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எனக்கு 2012 ஆம் ஆண்டு 35 ஆயிரம் சம்பளம் இருக்கும்பொழுது ரூபாய் பத்து லட்சத்தை எப்படி என் பணத்தைக் கொண்டு திருப்பி செலுத்தினார் என்று கூறுகிறேன் என்றால் 2011 ஆம் ஆண்டில் இருந்து எனது சம்பளத்தை அவர் தான் எடுத்து வருகிறார். அவை சேர்த்து வைத்தோம் மற்றும் எனது தாயார் மற்றும் எனது அண்ணன் கொடுத்த பணத்தை வைத்து தான் அவர் திரும்ப செலுத்தினார். அவர் ஃபிக்சட் டெபாசிட் செய்து வைத்ததற்கான ஆதாரம் ஏதேனும் உள்ளதா என்றால் அவருடைய வங்கி கணக்கு ஆதாரம் என்னிடம் இல்லை. வங்கி கணக்கில் எந்த ஆண்டிலிருந்து அவர் பிக்சட் டெபாசிட் செய்து வைத்திருந்தார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது .

7. என்னுடைய அக்கவுண்டை அவர் பயன்படுத்துவது எனக்கு தெரியாது. அவருடைய அக்கவுண்ட் பற்றி எனக்கு எப்படி தெரியும். எனது பணத்தை வைத்து தான் ரூபாய் 10 லட்சம் பிக்சட் டெபாசிட் செய்து வைத்து அதிலிருந்து 10 லட்சத்தை எடுத்து கடன் அடைத்ததாக குறிப்பிட்டுள்ளேன். ஆனால் எந்த வங்கி கணக்கில் 10 லட்சம் பிக்ஸ் டெபாசிட் செய்து வைத்தேன் என்று தெரியாமலே அதுபோல் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சி மறுக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு மாத சம்பளம் தோராயமாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் இருக்கும் தற்பொழுது. 2012 ஆம் ஆண்டு எனது கணவருக்கு எவ்வளவு மாத வருமானம் என்று எனக்கு தெரியாது. திருமணத்திற்கு இப்பொழுது அவருக்கு மாத வருமானம் ரூபாய் 8000 ஆகும். டிசிஎஸ் இல் பணியில் சேர்ந்த பொழுது அவருக்கு எவ்வளவு வருமானம் என்று எனக்கு தெரியாது .

8. எனது கணவர் எனது அனுமதி இல்லாமல் தான் எனது வங்கி கணக்கில் இருந்து எனது வருமானத்தை பயன்படுத்தி வந்தார் என்று நீதிமன்றத்தில் புகார் சொல்கிறேன் என்றால் சரிதான். எனது முதல் குழந்தை பிறந்த பொழுது எனது தாயார் வீட்டிற்கு சென்ற பொழுது எனது கணவரிடம் எனது வங்கி கணக்கின் விவரங்களை கொடுத்து விட்டு பார்த்துக் கொள்ள சொன்னேன் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே எனது வங்கி விவரங்களை அவர் பெற்றுக் கொண்டார். தேதி எனக்கு குறிப்பிட முடியாது. ஆனால் திருமணம் ஆன இரண்டு மாதத்தில் இருந்து அவர் பெற்றுக் கொண்டார். எனது வங்கி கணக்கில் இருந்து பணத்தை அனுப்பும் பொழுது மை சேலரி என்று குறிப்பிட்டுள்ளது என்றாலும் நான்தான் அவருக்கு பணத்தை அனுப்பிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1.2.2015 மற்றும் 2.2.2015 அந்த தேதியில் மெய் சேலரி என்று குறிப்பிட்டு அவருடைய வங்கி கணக்கு இருக்கு அனுப்பப்பட்டது என்றால் எதிர்மனுதாரர் அவற்றை அனுப்பிக்கொண்டு அந்த remarks my சேலரி என்று குறிப்பிட்டுள்ளார்.

9. உலகத்தில் யாரும் தனது மனைவி அக்கவுண்டில் இருந்து கணவன் அக்கவுண்ட் இருக்கு மை சேலரி என்று அனுப்ப மாட்டார்கள் என்றால் சரியல்ல. அவர்தான் எனது வங்கி கணக்கை பயன்படுத்தி மை சேலரிஎன்று போட்டுக் கொண்டார். 2023 ஜூலை மாதம் கார் வாங்கினேன் எனக்கு கார் ஓட்ட தெரியும்.2010 அந்த வருடங்களில் ஓட்டுநர் உரிமை பெற்றேன் . நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியமளிகிறேன் என்றாலும் எனது கணவரிடம் கார் ஓட்டுவதற்கு கற்றுக் கொடுக்கும்படி கேட்டேன் என்றால் நான் ஓட்டத் தெரிந்த பின்பு தான் ஓட்டுனர் உரிமம் பெற்றேன். கார் வாங்குவதற்கு முன் பணம் என்னுடைய பணத்திலிருந்து எடுத்து அவர்

செலுத்தினார். என்னுடைய அக்கவுண்டில் அப்பொழுது எவ்வளவு பணம் இருந்தது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் எனது பெயரில் கார் வாங்க வேண்டும் என்பதற்காக அவரது பணத்தை என்னுடைய அக்கவுண்டில் போட்டு எனது பெயரில் கார் வாங்கினார் என்றால் சரியல்ல.

10. எனது நண்பர்களிடம் பணத்தை கடனாக பெற்று அந்த பணத்தையும் போட்டு தான் கார் வாங்கினேன். கார் வாங்குவதற்கு பணம் பத்தாமல் இருந்ததற்காக தான் எனது நண்பர்களிடம் பணமாக பெற்றேன். கோயம்புத்தூரில் உள்ள ஹூண்டாய் ஷோரூம் இல் தான் காரை வாங்கினேன். முன்பணம் எவ்வளவு செலுத்தினேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் ஒரு லட்சம் இருக்கும்.

மறுவிசாரணை. இல்லை

Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
சோழிங்கநல்லூர்.